# ஜாகர்த்தாவில் இராணுவம மாணவா மோதல்


Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 | மலர் 10 | இதழ் 60

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 28 முஹறம் 11 புதன்கிழமை (10-4-68)


## ஒரு மாணவன் பலி

ஜாகர்த்தா, ஏப். 9

ஜாகர்த்தாவில் மாணவர்களுக்கும் துருப்புகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இம்மோதலில், 1 மாணவன், சூட்டுக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானான்.

அண்மையில் நடைபெற்று முடிந்த மக்கள்காங்கிரஸின் முடிவுகளை எதிர்த்து மாணவர்கள் ஆட்சேப ஊர்வலமொன்றை நடத்த முயன்ற போதே, இம்மோதல் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் காங்கிரஸின் முடிவுகளையடுத்து, ஜெனரல் சுஹார்ட்டோ, இந்தோனேசிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

மோதல் மற்றிக் குறிப்பிடுகையில், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்குத் தடைவிதித்திருந்தபோதிலும், தடையை மீறி மாணவர் ஊர்வலம் நடத்த முயன்றதன் விளைவாகவே இம்மோதல் ஏற்பட்டதாக ஓர் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

# யாழ். நகர நவீனசந்தைகட்டிட வேலைகள் 15-ல் தொடங்கும்

## கடைகள் இடம் பெயர்கின்றன

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நவீன மார்க்கட்டின் கட்டட வேலைகள் இம்மாதம் 15-ம் தேதியளவில் ஆரம்பமாகுமென தெரியவருகிறது.

பஸ்நிலையத்திற்கு எதிரில் தற்பொழுது 16 புதியகடைகள் கட்டப்பட்டுள்ளன. இக்கடைகள் பழைய பஸ்நிலையத்திற்கு எதிரில் கடைவைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 20-ம் தேதிக்குள் பழைய பஸ் நிலையத்திற்கு எதிரில் உள்ள கடைகளை காலி செய்துவிட வேண்டுமென யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ கமிஷனர்கள் கடைச் சொந்தக்காரருக்கு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

சிலகடைச்சொந்தக்காரர்கள் புதிய இடத்தில் இன்று கடைகளை திறந்து நடாத்துவார்கள். நவீன சந்தை கட்டிய பின்னர். இவர்களுக்கு அங்கு கடைகள் கொடுக்கப்படும்.

## பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை

### வேலைநிறுத்தம் நீடிக்கிறது

கொழும்பு, செவ்வாய்.

வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டுத் துறைமுகக் கூட்டுத்தாபனத் தலைவருக்கும், இலங்கை வர்த்தக ஊிப்பந்திகள் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஒரேயொரு விஷயத்தில் மட்டும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாகவும் புதுவருடத்துக்கு முன்னர் வேலைநிறுத்தம் முடிவடையக்கூடிய சாத்தியங்கள் இல்லையென்றும் அறியப்படுகிறது.

துறைமுக ஊழியரில் தற்காலிக வேலைநீக்கஞ்செய்யப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டதும் அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் வேலைசெய்ய மறுக்கக்கூடாதென்று கூட்டுத் தாபனத் தலைவர் தெரிவித்ததாகவும் ஆனால் கருங்காலிகளுடன் வேலைசெய்ய முடியாதென மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறதென வர்த்தக சிப்பந்திகள் சங்கக் காரியதரிசி திரு. பாலாதம்பு கூறியதாகவும், இதுவே பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்படக் காரணமென்றும் கூறப்படுகிறது.

இதேசமயம் இரு ஊழியர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து இன்சூரன்ஸ் கூட்டுத்தாபன ஊழியர் செய்து வரும் வேலை நிறுத்தம், பொதுவேலைநிறுத்தம் முடிந்த பின்னரும் நீடிக்கும் என திரு. தம்பு தெரிவித்திருக்கிறார்.

## அடம்பனில் வீட்டு தோட்ட போட்டி

### முதல் பரிசு ஒரு பசு

அடம்பன், செவ்.

வேப்பங்குளம் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் ஒரு வீட்டுத் தோட்டப்போட்டி தாமரைக்குளம் மாதிரிக்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மன்னார்பகுதியில் இதுவரை நடைபெறாத விதமாக முதல் பரிசாக ஒரு பசுவும் இரண்டாம் பரிசாக ஓர் ஆடும் மூன்றும்பரிசாக ஒரு சோடி கோழிகளும்வழங்க கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. கே.சி. பேக்மன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அடம்பன் கிராமசேவகர் திரு.ந.முத்துராசாவால் 12 பேர் போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடைசி மூவரைத் தேர்ந்தெடுக்கும் மத்தியஸ்தர்களாக திரு.கே.சி. லோகேஸ்வரன் [காரியாதிகாரி மாந்தை], திரு. கே.சி.பேக்மன் [கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர்], திரு. லிங்கநாதபிள்ளை [விவசாய விஸ்தரிப்புஉத்தியோகத்தர் அடம்பன்] ஆகியோர் கடமையாற்றுவர்.

## யானைக்குப் பலியானுர்

பரந்தன், செவ்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த இமானுவேல்பிள்ளை என்பவர் நேற்றுமுன்தினம் யானையால் தாக்கப்பட்டபின் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர். மரண விசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம், விசாரணையின்பின் விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## ராதா அப்பீல் விசாரணை

சென்னை, ஏப். 9

நடிகர் எம். ஆர். ராதா தாக்கல் செய்த அப்பீல் நேற்று சென்னை ஹைகோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை சுட்டதாகவும், தற்கொலைக்கு முயற்சித்ததாகவும், ராதாவுக்கு செஷன்ஸ் கோர்ட், 7 வருட கடுழிய சிறைத்தண்டனை விதித்தது. இத் தீர்ப்பை ஆட்சேபித்து ராதா அப்பீல் செய்திருந்தார்.

நடிகர் ராதாவுக்கு ஆஜரான மோகன் குமாரமங்கலம், தமது வாதத்தை ஆரம்பித்தார். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## எம். பி. முயற்சி

அச்சுவேலி, செவ்.

விவசாயப்படையில் வாலிபர்களைச் சேருமாறு கோப்பாய் எம். பி. கோரியுள்ளார். இது சம்பந்தமாக தமது தொகுதியில்இப்படையில் வாலிபர்களைச் சேர்ப்பதற்கு எம். பி. முயற்சி எடுத்துவருகிறார்.

## ரூ. 1000 அபராதம்: டின்பால் விற்க மறுத்தவருக்கு

கண்டி, செவ்,

டின் பால் வைத்துக்கொண்டு விற்க மறுத்த ஒருவருக்கு கண்டி மாஜிஸ்திரேட் திரு. டி. ஈ. தர்மசேசரா 1000 ரூபா அபராதம் விதித்தார்.

கண்டி— திருகோணமலை வீதியிலுள்ள வியாபார ஸ்தலத்தில் பால் டின்களை வைத்துக் கொண்டும் விற்க மறுத்தார் என குறிப்பிட்ட கடைச் சொந்தக்காரர் மீது விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பி. ஜி. குமாரணதுங்காவால் வழக்குத்தொடரப்பட்டிருந்தது.

நீண்ட விசாரணைக்குப் பின் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டதால் 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## இந்த தட்டுப்பாடு இனி இருக்காது

வவுனியா, செவ்.

வவுனியாமாவட்டத்துக்கு மீன் தட்டுப்பாடு இனிஇருக்கமாட்டாது எனக் கருதப்படுகிறது.

இங்கு பல இடங்களிலும் மீன் விற்பனை நிலையங்கள் விரைவில் திறக்கப்படவிருப்பதால் மீன் எல்லோருக்கும் கிடைக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, தண்ணீர்ஊற்று ஆகிய இடங்களில் மீன் விற்பனை நிலையங்கள் திறக்கப்படவிருக்கின்றன.

## "சமூகசேவையால் மனம் புனிதமடையும்"

உடுப்பிட்டி, செவ்.

"சனசமூ நிலையங்கள்வடமராட்சியில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளன. இது கூட்டுறவு மனப்பான்மை மீது மக்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தை எடுத்துக் காட்டுகின்றது. இளைஞர்கள் சோம்பல் தனமில்லாமல் முயற்சியுடன் உழைத்தால் அதிக பயன் பெறலாம். சமூக சேவையில் ஈடுபடுவதின் மூலம் எமது மனம் புனிதமடைகின்றது".

இவ்வாறு வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் வட கருணை எம். ஜி. ஆர். மன்ற சனசமூக நிலயத்தின் வருடாந்தக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. பொ. மார்க்கண்டு, தலைவர்: திரு. மு. இளையதம்பி, உப தலைவர்: திரு. வ. குமார், காரியதரிசி: க. நடேசன், உப காரியதரிசி: திரு. க. பரமேஸ்வரன், தனாதிகாரி: திரு. இ. குணம். உபதனாதிகாரி; திரு. சி. இராசு.

## வானுள் பெண் பிரசவம்

வவனியா, செவ்வாய்

ஓடிக்கொண்டிருந்த வானுக்குள்கர்ப்பிணியொருவர் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

வவனியாவுக்கு அண்மையில் உள்ள பாவற்குளம் என்னுமிடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஆஸ்பத்திரிக்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த இப்பெண்ணுக்கு பிரசவ வேதனை அதிகரித்துவிட்டதால் வழியில் சென்ற வானை மறித்து அதில் சிலரது உதவியுடன் இவர் வானில் ஏற்றப்பட்டதாகவும் வான் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் வழியில் இவர் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நியமனம்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக சுகாதார மந்திரியால் திரு. சி. செல்லையா நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

1 வட்டமான சாப்பாட்டு மேசை, 4 நாற்காலிகள், 2 வாங்குகள், 1 உருக்குபெட்டி, 2 மர 'பெல்மெட்' பைப் துண்டுகள், சில எஸ்-லோன் பைப்புகள், 1குழந்தை கொம்மோட், 6 பெரிய சீனிப் போத்தல்கள். 20-4-68க்கு முன் தொடர்பு கொள்ளவும். திருமதி குமாரகுலசிங்கி, வசந்தி, கிரிமலை. 1421

டிசைன்களுடன் தயாரிக்கப்பட்ட டக்கா சேலைகள், வேட்டி சால்வைகள், படுக்கை விரிப்புகள், போர்வைகள், மேசை விரிப்புகள், சாரங்கள், துவாய்கள், கைக்குட்டைகள் முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சங்கங்களுக்கும் மொத்தவியாபாரிகளுக்கும் விசேஷ கழிவுகளுண்டு. யாழ். மாவட்ட ஐக்கியநெசவுச்சங்கங்களின் சமாசம், 10/1 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1418

108-வது தினம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயாதினங்களில் 4 காட்சி

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த

**காவல்காரன்**

## விற்பனைக்கு

காணி:

வவனியா - மன்னார் [14-ம் கட்டை] ரோட்டில் 20 ஏக்கர் நெல் காணி தனிக் குளத்துடன் விற்பனைக்குண்டு. 8 ஏக்கர் திருத்தப்பட்டது. விபரங்களுக்கு: எஸ். தனநாயகம், பெரியதம்பனை, மடு சேஜ் அல்லது 208, கரங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1422

ஒரு ஹோட்டலுக்குரிய சகல தளபாடங்கள், சோக்கேஸ்கள், மேசைகள், இட்லிப்பானை, ஆட்டுக்கல் முதலியன விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். கமலா புத்தகசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1413

7 வார வயதுடைய உயர் ஜாதி அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஆண்குட்டி ரூபா 125/-. பெண் குட்டி ரூபா 100/- விபரங்களுக்கு திருமதி ச. இராசதுரை, முதலாவது ஒழுங்கை, வில்சன் ரோட், கிளிநொச்சி. 1416

## தேவை


எமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். பி. எம். பிள்ளை, நம். 46/1 நாலாவது ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 1505

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
GREGORY PECK
in
**MIRAGE**

**REGAL** JAFFNA
Daily at
4-40, -7-00, & 9-45 p.m.
Diana dors & Herbert lom
in
**Passport to Shame**
[Adults only

இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| இங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) |
| விஜயா (மட்டுநகர்) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) | விஜிதா (ஹட்டன்) |



சிவாஜி கணேசன் — சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

**சரஸ்வதி சபதம்**

(ஈஸ்ட்மென் கலர்)

## தசாக அழைப்பு

அன்புடையீர்,

கடந்த செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ ச. இராமசாமி குருக்கள் அவர்களின் தசாகத்திற்கு [எதிர்வரும் 11-ம் திகதி, வியாழக்கிழமை நண்பகல்] சமூகமளிக்கும்படி உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி இராமசாமி குருக்கள்,
இ. சண்முகசர்மா [மகன்]
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம். 705

## கேள்வி விளம்பரம்

1968-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் (சித்திரை) 22-4-68-ம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணி வரையும் வட்டுக்கோட்டைக் கிராமசபை அக்கிராசனரால் பதிவு செய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடும் வேலைக்குச் சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 21-4-68-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரையும், ரெண்டர்ப்பணமாக ரூபா 25/-ம், ரெண்டர்ப் பத்திரப்பணமாக ரூபா 2/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரிலும், யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கந்தோரிலும் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

தா சிவகுருநாதன்,
தலைவர்,
கிராமசபை,
வட்டுக்கோட்டை.

கிராமசபை அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
7-4-68.

வேலையின் விபரம்:

1. நல்லமாவடி கொட்டிசுட்டி வீதி அமைக்கும் வேலை. 613

## எதிரி விடுதலை

ஊர்காவற்றுறை, செவ்

சரவணை கிழக்கு வாசியான கே. கந்தையா என்பவரை அலவாங்கினால் அடித்தாக அதே இடத்தைச் சேர்ந்த எம். சின்னத்துரை என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் தக்க சாட்சியங்கள் இல்லை என்ற காரணத்தினால் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

## கல்லறைத் திருநாள்

ஊர்காவற்றுறை, செவ்

யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியில் கல்லறையுள்ள புனித ஆலயமான அடைக்கல மாதா தேவாலயத்தில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு கல்லறைத் திருநாள் அனுட்டிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான கத்தோலிக்க மக்கள் கல்லறைக்குமுன்னால் நின்று யேசுக்கிறிஸ்து நாதரை வழிபட்டனர். இவ் வைபவத்தை யொட்டி அடைக்கலமாதா ஆலய ...

# விளம்பரம்

வரணிக் கிராமசபையின்

## கேள்வி விளம்பரம்

வேலைகள்

1. சந்திரன் சேணி ரோட்டு.
2. வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை ரோட்டு.

1968-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17-ம் திகதி காலை 10 மணி வரை வரணிக் கிராமச்சபை அக்கிராசனர் அவர்களால் மேலே சொல்லப்பட்ட வேலைகளுக்குத் தனித்தனியே "சீல்" வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப் பணம் ரூபா 25/-ம் கிரயமாக ரூபா 5/- கட்டியதன் பேரில் 16-4-68-ம் தேதிக்கு முற்பகல் 12 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்குக் கேள்வி விளம்பரத்தைப் பார்வையிடுக.

க. ஆறுமுகம்,
அக்கிராசனர்,
வரணிக் கிராமச்சபை.

வரணிக் கிராமச்சபை,
6-4-68. 614

## புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, செவ்.

நாரந்தனைக் கிராம சபையைச் சேர்ந்த தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் ஆண்டுக்கூட்டத்தில் பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு வி. கனகசுந்தரம், உபதலைவர் திரு. ஐ. சிவநேசபிள்ளை, காரியதரிசி திரு. பி. சின்னத்துரை, உபகாரியதரிசி திரு எஸ். பாலதுரை, தனாதிகாரி திரு. என். அமரசிங்கம். நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

**மலிவுவிலைகளில்பிடவைகளை வாங்கி பூரண திருப்தி அடையுங்கள்!**

| | |
|---|---|
| * பட்டர் சில்க் சாறி | 24-50 |
| * டிப்ளேமப் சாறி | 19-50 |
| * கொர்னேஷன் சேட் | 7-00 |
| * கென்னடி சேட் | 8-50 |
| * ரெர்லின் சேட் | 14-50 |
| * ஸ்பென்ஸ்மூத் சேட் | 19-50 |

மற்றும்

றெடிமேட் கவுண்கள், றெடிமேட் சூட்கள்

பலரகங்களில் விலைப்பட்டியல்களுடன் உண்டு

விஜயஞ் செய்யுங்கள்!

**கணேசானந்தாஸ்**

(முட்டாசுக்கடைச் சந்தி)

208, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்.

## காணவில்லை

எனது பதினேழு வயதுப் புதல்வன் விக்னேஸ்வரன் [பவுண்] 4-4-68 தொடக்கம் காணாமற்போய்விட்டார். 5 அடி 4 அங்குல உயரமும் பொது நிறமுமுடையவர். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது மு சின்னப்பு. 42/7, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும்.



வருக! வாங்குக!!

புதுவருட

விசேஷ மலிவு விற்பனை

6-4-68 முதல்

நடைபெறுகிறது.



கண்கவர் வண்ணங்களில்

* நைலெக்ஸ் சாரி
* பிறை நைலன்
* பிரின்டெட் சாரி
* பட்டர் நைலன்
* டெக்ரோ பிளேன்
* டெக்கா சாரி

ஆடவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள சேர்ட்டுகள், சாரங்கள், வேஷ்டிகள்

பிள்ளைகளின் அழகைப் பிரமிக்கச் செய்யும் பேபி கவுண்கள் — சூட்கள்

விலைகள் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கின்றன. மலிவான விலையில் சிறந்த தரமான உடைகளை பெற்று இதமாக மனம் மகிழ

வருக! வாங்குக!

**ஞானபண்டிதன்**

ஜவுளிக் கடை

228, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னும் சமாதானப் பேச்சு வார்த்தைகள்

## கம்போடியத் தலைநகர் நாம்பெனில் நடத்தலாமென ஹனேய் ஆலோசனை

வாஷிங்டன், ஏப்ரல் 9

**வியட்னும் சம்பந்தமான பூர்வாங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஜெனீவாவில் நடத்தலாமென்ற, அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்சனின் ஆலோசனைக்கு வட வியட்னும் பதிலளித்துள்ளதாகத் திரு. ஜோன்சன் நேற்று இங்கு கூறினர்.**

**வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டிய இடம், காலம் பற்றிய நடவடிக்கைகள் இனித்தொடரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.**

ஆனல், வட வியட்னும அளித்துள்ள பதில் பற்றிய விபரங்களை அவர் அறிவிக்கவில்லை.

அமெரிக்க, வடவியட்னும் பிரதிநிதிகளுக்கிடையேயான பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் கம்போடியா தலைநகரான நாம்பெனில் நடைபெறுவதைத் தான் விரும்புவதாக ஹனேய் பதிலளித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆனல், இந்த ஆலோசனையை அமெரிக்க ஏற்கும் என்பதில் அரசியல் வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன. ஏனெனில், கம்போடியாவுடன் அமெரிக்காவுக்கு ராஜதந்திரத்தொடர்புகளில்லையா

## பார்வையினல் பொருட்களை அசைக்கும் பெண்

மாஸ்கோ, ஏப்ரல் 9

பொருட்களைப் பார்த்த மாத்திரத்திலேயே, அவற்றை அசையச் செய்யும் சக்திவாய்ந்த 40 வயதுள்ள மாஸ்கோப் பெண் ஒருவர் பற்றி இங்கு தகவல்கள் வெளியிப்பட்டுள்ளன

அவருடைய சக்தி பற்றிய தனிப்பட்ட ஒரு திரைப்படம், விஞ்ஞானிகளுக்குக் காண்பிக்கப்பட்ட பின்னர், முதற் தடவையாக இப்பெண் பற்றிய கட்டுரை, உள்ளூர்ப் பத்திரிகையொன்றில் அண்மையில் பிரசுரிக்கப்பட்டது.

பார்ப்பதன் மூலமே மணிக்கூட்டை ஓடாமல் நிறுத்தவும், மனோசக்தி மூலம், மேசை மீதுள்ள அப்பிள் பழங்களைத் துள்ளி விழச் செய்யவும் அல்லது நினைத்த மாத்திரத்தில், உணவை வாயினுள் உட்புகச் செய்யவும் இப் பெண்ணல் முடியுமெனக் கூறப்படுகிறது.

சில நேரங்களில், இச் சக்தியைப் பயன் படுத்தக் கூடிய நிலைக்குத் தன்னைக் கொண்டு வருவதற்கு இவருக்குச் சுமார் அரை மணி நேரம் கூடப் பிடிக்குமென்று 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

இந்தச் சக்தியை இப் பெண் தமது தாயாரிடமிருந்து பெற்றதாகச் சொல்லப் படுகிறது. இப்போது இவர் அதைத் தமது மகனுக்கு அளித்துள்ளாராம். மகன், சோவியத் செஞ்சேனையில் போர் வீரராகவுள்ளார்.

## இரு சாராரையும் வரவேற்க இளவரசர் ஷிஹானுக் தயார்

### சீன பற்றியும் எச்சரிக்கை

நாம்பென், ஏப்ரல் 9

தமது நாட்டின் தலைநகரான நாம்பெனில் அமெரிக்க வடவியட்னும்பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவது பற்றிக் கம்போடிய இளவரசர் ஷிஹானுக் குறிப்பிடுகையில், இரு சாராரையும் வரவேற்கத் தாம்தயாராகவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். வியட்னுமில் அமெரிக்க குண்டு வீச்சு முழுவதாக நிறுத்தப்படுவதைத் தாம் விரும்புவதாகவும் இளவரசர் ஷிஹானுக் குறிப்பிட்டார்.

வியட்னுமில் சமாதானம் ஏற்படுவதன் மூலம்தான், ஆசியாவிலே அமைதி நிலவ வழிபிறக்குமென்றும் இளவரசர் மேலும் கருத்து வெளியிட்டார்.

அப்படி வியட்னுமில் சமாதானம் ஏற்படுத்தத் தவறினல், அமெரிக்காவோ அல்லது சோவியத் ரஷ்யாவோ ஆசிய அமைதிக்கு உத்தரவாதமளிக்க முடியாத நிலை தோன்றவே வழி பிறக்கும் என்று இளவரசர் எச்சரித்தார்.

வியட்னும் போரை இழுத்தடிப்பதே சீனவின் நோக்கம் என்று கூறிய இளவரசர், வியட்னும் சீனவின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டால், பிறகு ஆசியாவைக் காப்பாற்றுவது கடினமான காரியமே என்ருர்.

## மற்றுமொரு நீக்ரோத் தலைவருக்கு கொலைப்பயமுறுத்தல்

ஜாக்ஸன், (மிஸிஸிப்பி) ஏப்ரல், 9

அமெரிக்க நீக்ரோக்களின் சிவில் உரிமைப் போராட்டத் தலைவர் டாக்டர் கிங் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, மற்றுமொரு நீக்ரோத் தலைவருக்கு பயமுறுத்தல் கிடைத்துள்ளது. இவர் திரு. சார்ல்ஸ் இவேர்ஸ் ஆவர்.

இப்பயமுறுத்தல்இவருக்கு தொலைபேசி மூலம் வந்தது. டாக்டர் கிங், மெம்பிஸ் பட்டினத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தம்முடன்தொலைபேசியில் தொடர்பு கொண்ட இனந்தெரியாதநபர்ஒருவர், 'நாங்கள்இப்போதுதான் அந்தக் கறுப்பர், மார்டின் லூதர் கிங்கைக் கொன்ருேம். அடுத்தது நீரே என்று பயமுறுத்தியதாகத் திரு. இவேர்ஸ் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பின்னர் தமக்கும் பல தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும் அவற்றில் அநேகம்பெரும் சிரிப்புக்குரலாகவே இருந்ததாகவும்திரு. இவேர்ஸ் வேலும் கூறினர்.

திரு. இவேர்ஸின் சகோதரர் திரு. மெட்கார் இவேர்ஸ் ஐந்து வருடங்களுக்கு முன் இங்கு கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா. வில்

## இஸ்ரேலின் புதிய தாக்குதல் பற்றி ஜோர்தான் புகார்

நியூயோர்க், ஏப். 9

நேற்று ஜோர்தான் மீது இஸ்ரேல் நடத்தியுள்ள தாக்குதலொன்று பற்றி ஜோர்தான் பிரதிநிதி ஐ. நா. பந்தோபஸ்து சபையிடம் புகார் செய்துள்ளார்.

இத்தாக்குதலில் விமானங்களையும், கவச வண்டிகளையும் இஸ்ரேல் பயன்படுத்தியதாக அவர் அந்தப் புகாரில் மேலும் குற்றஞ்சாட்டினர்.

விமானங்களையும் கவச வண்டிகளையும் தான் பாவித்ததென்ற ஜோர்தானின் குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துள்ளது.

ஜோர்தான்எல்லையில் அரபுத் தீவிரவாதிகள் சிலரைத் தனது துருப்புகள் துரத்திச் சென்றதாகவும், அவர்களில் 3 பேரைக் கொன்றபின் துருப்புகள் திரும்பி வந்துவிட்டதாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஜோர்தான் பக்கத்திலிருந்து அரபுத் தீவிரவாதிகள் நாசகார வேலைகளில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரேல் ஐ. நா.ப் பிரதிநிதி ஐ. நா பந்தோபஸ்துசபைத்தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனல் சபையின் கூட்டத்தை அழைக்குமாறு அதில் கோரப்படவில்லை.

## செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய மந்திரி சபை

### 29 மந்திரிகள் இடம் பெற்றுள்ளனர்

பிராக், ஏப். 9

செக்கோஸ்லாவாக்கியா புதிய மந்திரிசபை அறிவிக்கப்பட்டுள்ளது. இப் புதிய மந்திரிசபையில் 29 மந்திரிகள் இருக்கிருர்கள். மந்திரிசபைக்குப் புதிய பிரதமர் திரு. செரனிக் தலைமை வகிக்கிருர்.

புதிய மந்திரிசபையின் பெரும்பான்மை அங்கத்தினர் செக்கோஸிலாவாக்கியா புதிய ஜனதிபதி ஜெனரல் டூசெக் கின் சீர்திருத்தங்களை அமுல் நடத்துவதில் ஆர்வமும் உறுதியும் கொண்டுள்ளனர்.

முன்னுள் கட்சிக்கழக

[7-ம் பக்கம் பார்க்க]

## வியட்னும் போரை நீடிக்கச் சீன விருப்பம்

பீகிங், ஏப்ரல் 9

பீகிங்கிலிருந்து கிடைக்கும் செய்திகளும் இளவரசரின் கருத்தை உறுதிப்படுத்துகின்றன. அமெரிக்காவுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குவடவியட்னும் இணங்கியுள்ளது,பீகிங்குக்குப் பிடிக்கவில்லை எனத் தெரிகிறது. போரைத்தொடர்ந்து நடத்தவேண்டும் என்பதே சீனவின் விருப்பமெனவும் தெரிகிறது.

பேச்சுவார்த்தைகளுக்கு வட வியட்னும் இணங்கினுல், வட வியட்னுமுக்களித்துவரும் உதவியைச் சீன நிறுத்திவிடலாமெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன

சீன இராணுவப் பதில் தளபதி, இப்போது ஹனேய் சென்றிருக்கிருர் எனக்கூறப்படுகிறது.

## வியட்னும் ஆலோசகருடன் ஜோன்சன் மாநாடு

### தென் வியட்னும் எதிர்ப்பு பற்றித் தூதுவர்

வாஷிங்டன், ஏப்ரல் 9

இதற்கிடையில், வியட்னும் சம்பந்தமான முக்கியபேச்சுவார்த்தைகளை அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன், தமது ஆலோசகருடன் காம்ப்டேவிட்டில் நடத்துவதாக வாஷிங்டன்செய்திகள் தெரிவித்துள்ளன.

இப்பேச்சுவார்த்தைகளில் தென் வியட்னும் அமெரிக்க தூதுவர் திரு. பங்கர், அமெரிக்க ராஜாங்க பாதுகாப்பு மந்திரி திரு. ஆதர் கிளாக், ராஜாங்க வெளியுறவுமந்திரி திரு. டீன் ரஸக் ஆகியோரும்கலந்துகொண்டுள்ளனர்.

வட வியட்னுமுடன் அமெரிக்கா சமாதானம் பேசும் விஷயம் குறித்து, ஆச்சரியப்படத்தக்கும் விதத்தில் தென் வியட்னும் தேசிய சட்டசபை எதிர்ப்புத் தெரிவித்துவருவதாகத் தென் வியட்னும அமெரிக்கத்தூதுவர் திரு பங்கர், இப்பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்துள்ளார்.

தென் வியட்னுமைக் கலந்துகொள்ளாமல் நடைபெறும் எந்தப்பேச்சுவார்த்தைகளும் வியட்னும்சமாதானத்துக்கு வழி வகுக்க முடியாதெனச் சட்டசபை கருத்து வெளியிட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிருர்.

## அமெரிக்க நகரங்களில் இப்போது அமைதி நிலவுகிறது

### கிங் இறுதிச் சடங்கில் ஜோன்சன் கலந்து கொள்கிருர்

வாஷிங்டன், ஏப். 29

மூன்று நாள் இனக்கலவரங்களுக்குப் பின், அமெரிக்க நகரங்கள் பலவும் இன்று அமைதியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கலவரங்களில் இதுவரை 25 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானேர் காயமடைந்துள்ளதாகவும் 10,000 க்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டிடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் கோடிக்கணக்கான டொலர் பெறுமதியாகவிருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மறைந்த நீகரோத் தலைவர் டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் பிறந்த ஊராகிய அட்லாண்டாவுக்குள் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றனர். அவருடைய இறுதிச் சடங்குகளும், ஊர்வலமும் இன்று நடைபெறுகின்றன.

இறுதிச்சடங்குகளில் அமெரிக்கஜனதிபதி ஜோன்சனும் கலந்து கொள்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பிறருக்குக் கொடுக்க வேறெதுவுமில்லா விடினும் ஓர் அன்பான உண்மையான புன்சிரிப்பையாவது தாருங்கள். இதற்குச் செலவு எதுவுமில்லை. என்றாலும் இதனால் மற்றவருக்குப் புதுத் தைரியமும், பலமும் ஏற்பட்டு, அவரது துக்கமும் போய்விடுகின்றது.

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrm: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 89.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 28ம் திகதி[10-4-68]

## நாயுடுவின் சேவை நமக்கும் கிடைக்கட்டும்

ஒரு மந்திரியை அழைத்து, புது வீடு கட்டுவதற்காகக் காலையில் அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. மந்திரிக்கு விருந்துபசாரம்செய்த பின் மாலையில் அதே மந்திரியைக்கொண்டு காலையில் அத்திவாரக்கல் நாட்டப்பட்ட அதே வீடு திறந்து வைக்கப்பட்டது இந்த அதிசயம் நடந்தது தமிழ் நாட்டிலுள்ள கோயம்புத்தூர் என்ற இடத்தில். இதைச் செய்து காட்டியவர் அதிசய மனிதர் என்றழைக்கப்படும் தொழில் அதிபர் திரு ஜி. டி. நாயுடு. ஒரு வீட்டை மட்டும் அவர் கட்டி அமைத்துக் காட்டவில்லை. ஆயிரம் ரூபாய்க்குள் ஒரு சிறிய குடும்பம் வசதியாக வசிக்கக்கூடிய தான ஒரு வீட்டை ஒரு நாளில் கட்டிமுடிக்கலாமென்பதை இதர பல இடங்களிலும் அவர் காட்டிவருகிறார். இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் வீட்டுப்பிரச்னையை நீக்கித் தருவதாகவும் திரு. நாயுடு உறுதியளித்திருக்கிறார். சென்னையில் சேரிப்பிரச்னைக்கே தீர்வு காணமுடியுமென்றும் அவர் கூறியிருக்கின்றார். இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் வீடில்லாப் பிரச்னை பெரும் பிரச்னையாக இருக்கிறது. திரு. நாயுடுவின் சேவையை இலங்கையும் பயன்படுத்த முன்வந்தால் என்ன?

உணவு, உடை, வசிப்பிடம் மனிதனின் அத்தியாவசியத் தேவைகள். இலங்கையில் வீடில்லாப் பிரச்னை பெரும் பிரச்னை. இப்பிரச்னையைத் தீர்ப்பதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்றும் இதற்கான சட்டங்கள் கொண்டுவரப்படுமென்றும் நமது வீடமைப்பு அமைச்சர்கள் பலவருடங்களாக மேடைகளில் வாக்குறுதியளித்து வந்துள்ளனரேயன்றிச் செயலில் எதுவும் நிறைவேற்றவில்லை.

திரு. ஜி. டி. நாயுடு வெறும் வாய்ப்பேச்சு வீரர் அல்லர் அவர் செயல்வீரர். விவசாயத்திலும், தொழில்துறையிலும் பல சாதனைகளைச் செய்துகாட்டியிருப்பவர். மிகக் குறைந்த செலவில் அதாவது ஆயிரம்ரூபாய்க்குள் ஒரு சிறு குடும்பம் வசதியாக வசிக்கக்கூடிய வீடு, சுண்ணாம்பும், செங்கல்லும் கொண்டு உறுதியாக அமைக்கமுடியும் என்று செயலில் காட்டியுள்ளார். வீடில்லாப் பிரச்னையை நீக்கிவிட முடியுமென்று அவர் சொல்லுகின்றார். இது போன்ற வீடுகளை அமைப்பதில் இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கவும் அவர் முன்வந்திருக்கிறார். இந்தியாவிலுள்ள இளைஞர்களைத்தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆயினும் எந்தவொரு சிறிய விஷயத்துக்கும் மேற்கு நாடுகளில் பயிற்சிபெறுவதற்கும், மேற்கு நாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் முனைந்துநிற்கும் நாம், அருகேயுள்ள தமிழ்நாட்டில் அதிசய மனிதரின் ஆலோசனைகளைப் பெறவும். அவரிடம் இந்த அதிசய வீடமைப்புமுறையில் நம் நாட்டவர் சிலர் பயிற்சி பெறுவதற்கும் நமது அரசாங்கம் முன்வந்து முயற்சிசெய்தால் நல்ல பயன் கிடைக்காமல் போகாது.

# புராதன பெருமை கொண்ட புளியம் பொக்கணை நாகேசுவரர் கோவில்

— ஆர். ரி. சுப்பிரமணியம் —

( அதிபர், நாகேசுவர வித்தியாசாலை )

புராதனப் பெருமை கொண்ட புளியம் பொக்கணை நாகேசுவரர் சிவன் கோவில் பரந்தனிலிருந்து சுமார் பதினொருமைல் தொலைவிலுள்ளது.

நாளை நடைபெறும் ஆண்டு உற்சவத்திலும் பொங்கலிலும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வடபகுதியின் பல பகுதிகளிலுமிருந்தும் கலந்து வழிபடுவார்கள்

நீர்வளமும் நிலவளமும் கொண்ட கரைச்சிப் பகுதியிலுள்ள புளியம்பொக்கணை என்னும் ஊரில் குடியேறி வாழ்ந்த வன்னியர் குலதிலகராகிய நீதிநாயகமுதலியார் ஒல்லாந்தரின் ஆட்சிக்கால ஆரம்பத்தில் சகலரும் சீரும் சிறப்புடனும் கமலம்மையார் எனும் உத்தமியை மணந்து இல்லறவாழ்க்கை நடத்திவந்தாரெனவும் புத்திர பாக்கியம் கிட்டாமையால் சகல சிவதயாபர மூர்த்தியாகிய சிவபெருமானையும் உமாதேவியாரையும் வழிபட்டு பிரார்த்தித்து ஒன்றன்பின் ஒன்றாக இரு ஆண்மகவுகளைப் பெற்று மனம்துயர் தீர்ந்தாரெனவும் பின்னர் அவரது மனைவி கர்ப்பமுற்று பங்குனி மாதமும் உத்தரமும் பூரணையும் கூடிய சுபவேளையில் ஒரு பெண் மகவையும் அத்துடன் ஒரு சர்ப்பத்தையும் பிரசவித்தாரெனவும் இப்பாம்பை தாய் ஒதுக்காது பாலூட்டி வளர்த்தாரெனவும் சில நாட்கள் செல்ல இந்தச் சர்ப்பத்துடன் வேறு சில சர்ப்பங்களும் சில தொல்லைகள் செய்யத்தலைப்பட்டபோது ஒரு நாள் இத்தாய் தொல்லை சகிக்காது இச்சர்ப்பங்களை கோபித்துக்கொண்டதாகவும் அவை எங்கோ சென்று புதைந்து விட்டதாகவும் இதனால் நீதிநாயக முதலியாரும் மனைவியாரும் கவலைகொண்டிருந்த போது சிவன் கனவில் தோன்றி சர்ப்பங்களுக்குக் கோவில் ஒன்று கட்டுமாறும் சர்ப்பத்தையே தாம் என மதித்து வழிபடுமாறும் அதனால் நன்மை உண்டாகுமெனவும் கூறியதாக புராணத்தில் காணக்கிடக்கிறது.

இவ்விதம் புளியம்பொக்கணை நாகேசுவரர்சிவன் கோவிலின் பெருமை கூறும் பல சரித்திரங்களுமுண்டு.

பெருமைவாய்ந்த இந்த ஆலயத்தின் தலமூர்த்தியின் பெயர் நாகதம்பிரான், தேவி பெயர் நாகேஸ்வரி.

தமது குறைகள் தீர்த்து அருள் பெற்றுய்ய இந்த ஆலயத்துக்கு நாளை பெருந்தொகையான அடியார்கள் வந்து கூடுவார்கள்.

## கோப்பாய் எம். பி.க்கு வலிகாமம் கி.தமிழ்ஆசிரியர் பாராட்டு

உரும்பராய், செவ்

ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள வலிகிழக்குப் பகுதியிலிருந்து ஆசிரியர்களைப் பற்றாக்குறையென்ற பேரில் கிளிநொச்சி, ஊர்காவற்றுறைப் பகுதிக்கு மாற்றுதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு வலி. கிழக்கு தமிழாசிரியர் சங்கம் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளைக்கு விடுத்த வேண்டுகோளையடுத்துகோப்பாய்த் தொகுதியிலுள்ள ஆசிரியர்களை 1-5-68ல் ஏனையபற்றாக்குறைத்தொகுதிகளுக்கு மாற்றுதிருக்கும்படி கல்விப் பகுதியைக் கோப்பாய் எம். பி. கேட்டிருப்பதைப் பாராட்டி ஒரு தீர்மானம் சென்ற சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வலிகிழக்குப் பகுதி தமிழ்ஆசிரியர் சங்க அவசிய ஆலோசனைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலிகிழக்கு தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. குமாரசுவாமி தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் வடபிராந்திய வித்தியாதிபதியை உடனடியாகப் பேட்டி காண்பதென மற்றுமோர் தீர்மானம் நிறைவேறியது. தலைவர், காரியதரிசி, தனாதிகாரி உட்பட ஐந்து பேர்கொண்ட உபசபை தெரிவுசெய்யப்பட்டது.

இடமாற்றத்தை எதிர்ப்பதற்குத் தெரிவிக்கப்பட்ட காரணங்கள்:

கிளிநொச்சிப் பகுதியில் உண்டான பாடசாலைகள் யாவும் கிராம முன்னேற்றச் சங்கப்பாடசாலைகளே அதில் நியமனம் பெற்றவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்களோ அவர்களைக்கொண்டே பற்றாக்குறையை நிவிர்த்திசெய்தல் வேண்டும்.

தீவுப்பகுதி ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணப் பகுதியில் கடமைசெய்கிறார்கள். அவர்களைத் தீவுப்பகுதிக்கு மாற்றுவது மிகவும் பொருத்தமாகும்.

இடைக்கால மாற்றம் கல்வியைப் பாதிக்கும். ஆசிரியர்க்கு அசிரியர் மாற்றமாய் அமைதல் கல்வி வளர்ச்சிக்குக் குந்தகமாகும்.

வெளிஇடங்களில் (பூநகரி போன்ற இடங்களில்) கஷ்டப்பட்டவர்களைத் திரும்பவும் மாற்றுதல் நியாயமாகாது.

இடைக்கால மாற்றத்தினால்சம்பந்தப்படும்ஆசிரியர்களின் குழந்தைகளின் கல்வி நிலை நிர்க்கதிக்குள்ளாக்கப்படும்.

45 வயதுக்குட்பட்டவர்கள் 1-1-68-ல் வெளிஇடங்களுக்கு மாற்றப்பட்டார்கள். 45—50 வயதுக்குட்பட்டவர்களும் கிளிநொச்சி ஊர்காவற்றுறைப் பகுதிக்கு மாற்றப்பட்டால் வயது சென்ற ஒரு கூட்டத்தால் மட்டுமே குடாநாட்டுக்குள் கடமையாற்றும் சூழ்நிலை ஏற்படும். இந்நிலையும் கல்வியைப் பாதிக்கும்.

வலி. கிழக்குப் பகுதி (கோப்பாய் வட்டாரம்) தற்பொழுது ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள இடமாகவே இருக்கிறது.

வட்டாரப் பேச்சுப்போட்டியை இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நடத்துவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## ஆண்டுவிழாவும் ஆரம்பவிழாவும்

யாழ்ப்பாணம், புதன்

சோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச்சங்கத்தின் 8-வது ஆண்டுவிழாவும் மாதர் முன்னேற்றச் சங்கத்தின் ஆரம்ப விழாவும் இன்று நடைபெறவிருக்கிறது. அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா தலைமைவகிப்பார்.

சிவகாமிஅம்மன் கோவில் முன்றலில்நடைபெற விருக்கும் இவ்விழாவில் வடபகுதி பொலிஸ்சுப்பிரின்டன் திரு. ஆர் சுந்தரலிங்கம், யாழ்ப்பாண காரியாதிகாரி திரு. ஏச். ஈ. புள்ளை நாயகம், நல்லூர் எம்.பி. டாக்டர் ஈ. எம்.வி, நாகநாதன். கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டபிள்யூ. ஆர். நல்லையா, முதலியோர் பேச்சாளர்களாகக் கலந்து கொள்வர்.

இன்றுமேடையேற்றப்படும் 'திருவிளையாடல்' என்னும் புராண நடாகத்தை நீதியரசர் டாக்டர் ஏச் டபிள்யூ. தம்பையா ஆரம்பித்துவைப்பார்.

## தொழிற்சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி விவசாய பண்ணை ஊழியர் தொழிற் சங்கத்தின் ஆண்டு விழா இன்று பிற்பகல் நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

## ஆசிரியர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க வடபகுதிக்கிளைக் கூட்டம் இன்று மாலை யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். யாழ்ப்பாண எம். பி திரு ஜி ஜி பொன்னம்பலம் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்.

## நாட்டிலும் நகரிலும்

பைத்தியக்காரன் என்றால் என்ன?

என்னைப் பொறுத்த வரையில் இவ்வுலகிலுள்ள எல்லோருமே பச்சைப் பைத்தியக்காரன்கள். ஒருவனுக்கு பணப் பைத்தியம், மற்றவனுக்கு பெண் பைத்தியம், இன்னொருவனுக்கு பதவிப் பைத்தியம், வேறொருவனுக்கு காணிப் பைத்தியம், மற்றொருவனுக்குசாப்பாட்டுப் பைத்தியம், இன்னுமொருவனுக்கு குடிப் பைத்தியம் அப்பப்பா, இப்படி எத்தனைபைத்தியங்கள்தான் இந்த கேவலமான பூமியில்!

இசை, இலக்கணம், இலக்கியம், கதை, கவிதை, சிகரெட், சுருட்டு, சினிமா, சொக்கலெட், பனங்கிழங்கு, பால் ரொட்டி, ஒடியல் கூழ், எட்டாம் மடை- இவை எல்லாமே ஒவ்வொருவனை ஒவ்வொரு சமயம் வெறும் விசரனாக்கி விடுகின்றன.

இந்தப் பைத்தியங்களில் ஆக முழுப் பைத்தியங்கள் கலை உலகத்தோடு சம்பந்தப்பட்ட பைத்தியங்கள்.

ஐரோப்பாவிலுள்ள சில பெரிய தலைநகரங்களில் 'பைத்தியக்காரர்' என்று சாதாரண மனிதரால் பட்டம் சூட்டப்பெற்று மனநோய் ஆஸ்பத்திரிகளில் சீவியம் செய்யும் சில மனிதர் தீட்டிய ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தனவாம்,

பைத்தியக்கார உலகம் எப்படிப் பட்டதென்பதை இந்தக் கண்காட்சி காட்டுகிறதென்று நினைந்து அங்கே மனோதத்துவ நிபுணர்களும் படையெடுக்கிறார்களாம்.

பைத்தியக்காரரின் உள்ளங்களில் நிகழ்கின்ற மனப் போராட்டங்களை அவர்கள் தீட்டிய ஓவியங்கள் சித்தரிக்கின்றன என்று நினைந்து இந்த நிபுணர்கள் அவற்றை மிகக் கூர்மையாக அவதானித்தார்கள்.

அப்பொழுது அவர்கள் ஒரு மகா அதிசயத்தைக் கண்டு பிடித்தார்கள். அதாவது, தற்காலத்தில் 'நவீனக் கலை' என்று சொல்லி தூரிகையால் நாலைந்து கீறுகள் குறுக்கும் நெடுக்குமாய்ப் போட்டு விட்டு, இது தான் 'ஒப்ஜெக்டிவ் ஆர்ட்' என்று காட்டுகிறார்களே! பைத்தியக்காரர்களின் ஓவியங்கள் அச்சோட்டாக அந்த ஓவியங்களை ஒத்திருக்கின்றனவாம்!

உண்மையில் யார் தான் பைத்தியக்காரர்கள் என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகிறதல்லவா?

ஒருவன் இன்னொருவனைப் பார்த்து 'இது வெறும் பைத்தியம்' என்று கூறுகிறான். அந்த இன்னொருவன் அந்த ஒருவனைப் பற்றிக் குறிப்பிடும்போது 'அது சுத்த லூஸ்' என்று சொல்லுகிறான்.

கள்ளம், கபடம், சூது, வாது, கோள், குண்டனி முதலிய சகலவிதமான கீழ்த்தர உபாயங்களையும் கையாண்டு காக்காய்பிடித்து மேலிடத்துக்கு வந்து கூடுதலான சம்பளம் வாங்குகிறவன், நீதி, நேர்மை, சத்தியம், சுயமுயற்சி ஆகிய நன்னெறி ஆயுதங்களை மட்டும் நம்பி அதனால் பதவி ஏற்றமும் சம்பள உயர்வும் இல்லாமல் தத்தளிப்பவனைப் பார்த்து 'இவனுக்கு மேல்வீடு பழுது' என்று நினைப்பான்.

தினமும் எவனையாவது 'தட்டிச் சுற்றி'ப் பிழைப்பவன் பிச்சையெடுப்பவனைப் பார்த்து 'இவன்வாழத்தெரியாத விசரன்' என்பான்

இப்படியே உலகத்தில் ஒருத்தனுக்கு மற்றவன் பைத்தியக்காரன். யார் உண்மையில் பைத்தியக்காரன் என்று தீர்மானிப்பது எப்படி?

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை ஒழிப்புக்கு பலம்வாய்ந்த ஓரேஇயக்கம்

## இந்துமாமன்றத்துடன் இணைந்து பணிபுரிய பிரமுகர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

ஆலயப்பிரவேசத் திற்கு எல்லா இடங்களிலும் ஆதரவு கூடிவருகிறது. ஆலயப் பிரவேசத்தை எதிர்த்தவர்கள் கூட இன்று ஒரு விதத்தில் ஏற்றுள்ளார்கள். பலம் பொருந்திய இயக்கமொன்று தீவிரமாக இதில் ஈடுபடவேண்டும். பல்பல இயக்கங்கள் இதில் ஈடுபடுவதனால் இதன் நோக்கங்கள் சிதறிப்போய்விடும் ஆதலால் எல்லா இயக்கங்களும் ஒன்றாக இணைந்துசெயல்படவேண்டும்.

வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் யாழ்ப்பாணமாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. மி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

திரு. மு.வைரமுத்து தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் டாக்டர் பி. சிவசோதி, காரியாதிகாரி வி. கந்தப்பிள்ளை, அட்வகேட் எஸ். பொன்னையா, திருமதி சரவணமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்,

திரு. மி. முருகேசம்பிள்ளை மேலும் கூறியதாவது:—

இந்துமாமன்றம் தீண்டாமை ஒழிப்பில் குறிப்பாக ஆலயப் பிரவேசத்தில் அதிக அக்கறை எடுத்துவருகிறது. இந்துமாமன்றத்தினர் குழுக்களாகச் சென்று ஆலய தர்மகர்த்தாக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திவருகின்றனர். இவர்களின் பேச்சு வார்த்தைநல்ல பயனை அளித்துள்ளது. இவர்கள் யாழ்ப்பாணத்தில் சுமார் இரண்டுவார காலம் தங்கியிருந்து ஆலயப்பிரவேசத்திற்கான ஆரம்பநடவடிக்கைகளை எடுப்பதற்காக இங்குவருகின்றனர்.

தனித்தனி இயக்கங்களாக தீண்டாமை ஒழிப்பில் இறங்காமல் ஒரே இயக்கமாக இயங்கினால் நல்ல பயனைப் பெற முடியும். தீண்டாமைஒழிப்பில் அக்கறை உள்ள இயக்கங்கள் தனிப்பட்டவர்கள், இந்துமாமன்றத்தில் சேர்த்துஅதை ஒரு பலம் பொருந்திய இயக்கமாக உருவாக்கி அதன் மூலம் தீண்டாமையை ஒழிக்க முன்வரவேண்டும்.

இந்துமாமன்றத்தினர் கிராமங்களுக்கு சென்று பிரசாரம் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமங்களிலும் இந்துமாமன்றகிளைகள்நிறுவி செயலாற்றவேண்டும். கிராமங்களிலுள்ள கோயில் தர்மகர்த்தாக்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

நேற்று முன்தினம்மாவிட்டபுரத்தில் நடந்தகூட்டத்தின் பின் ஆலயப் பிரவேசத்துக்கு ஆதரவு அதிகரித்துள்ளது. அடுத்த கூட்டம் சந்நிதி கோவிலில் வைக்க தீர் மானிக்கப் பட்டுள்ளது. அதன்பின் அச்சுவேலிப்பிள்யார் கோவிலில் கூட்டம் நடைபெறும். இப்படியாக ஒவ்வொரு கோவில்களிலும் கூட்டம் வைத்து பிரசாரம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

### மனமாற்றம் ஏற்பட்டுள்ளது

மாவிட்டபுரத்தில் நடந்த கூட்டத்தில், [illegible] தியை சேர்ந்த பல [illegible]கள், ஆலயப்பிரவேசத்திற்கு பகிரங்கமாக தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். இந்துமாமன்றத்தில். வீட்டுக்கொரு வாலிபராக சேர்ந்து, கிராமங்கள்தோறும் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தில் இறங்கவேண்டும். அரசாங்க செயலகத்தில், நடந்த ஆலயப்பிரவேசம் சம்பந்தமான கூட்டங்களில் எதிர்ப்பு தெரிவித்தவர்கள் கூட இன்று மனம்மாறியுள்ளார்கள். நாட்டில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆலயப் பிரவேச இயக்கத்திற்குஆதரவு கூடிவருகிறது.

திரு. மு. வைரமுத்து கூறியதாவது:- தீண்டாமைபிரச்னையில் ஆலயப் பிரவேசம் தான் முக்கியமானது. ஆலயப்பிரவேசம் நிறைவேறிவிட்டால், மற்றப் பிரச்னைகள் சுலபமாக தீர்ந்துவிடும். ஆலயப் பிரவேசத்திற்கு இந்துமாமன்றம், பலமுயற்சிகளை எடுத்துவருகிறது.

ஆலயப்பிரவேசத்தில் சில கட்டுப்பாடுகள் இருக்கத்தான்வேண்டும். ஆனால் அவை சாதி அடிப்படையில் இருக்கக்கூடாது. ஆசாரம், ஒழுக்கம், புனிதத்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சில கட்டுப்பாடுகள் அவசியம். சாதி கட்டுப்பாட்டை குறிப்பிடாமல், சில கட்டுப்பாடுகளை பகிரங்கமாக தெரிவித்து இக்கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட்டவர்கள் ஆலயப்பிரவேசம் செய்யலாம் என அறிவித்துவிட்டால், எவ்விதகஷ்டமுமின்றி மிகவும் சுலபமாக ஆலயப் பிரவேசம் நடைபெறும்.

திருவிழாக்காரர்கள், கோயில்மனேசர், பூசகர், தர்மகர்த்தா ஆகியவர்களை தனித்தனியாகவும், பின்பு கூட்டாகவும் சந்தித்துஅவர்களின் கருத்தையறியவேண்டும். அதன்பின் அக்கிராம மக்களுடன் கலந்தாலோசித்து, எதிர்ப்புக்கள் இருக்கிறதா? அந்த எதிர்ப்புக்களை எப்படிச் சமாளிக்கலாம்என்பதைஅறிந்துகொள்ளவேண்டும். பிரசாரக் கூட்டங்கள் மூலம், மக்களுக்கு, ஆலயப் பிரவேசத்தின் அவசியத்தை விளக்கவேண்டும். பலம் பொருந்திய ஒரேஒரு இயக்கம், இதற்காக செயலாற்றினால்தான் இதுநிறைவேறும்.

அட்வக்கேட் எஸ். பொன்னையா கூறியதாவது:—

இந்துமாமன்றத்துடன் இணைந்து, செயலாற்றுவது தான் சிறந்ததென்பது என் கருத்து. இந்துமா மன்றத்தை பலம் பொருந்திய இயக்கமாக்க. ஆயிரக்கணக்கானோர் அதில் அங்கத்தவர்களாக சேரவேண்டும். பலம் பொருந்திய இயக்கத்தினால் தான் தீண்டாமை பிரச்னையைத் தீர்க்கலாம்.

டாக்டர் பி, சிவசோதி காரியாதிகாரி கந்தப்பிள்ளை ஆகியோரும் பேசினார்கள்.

## விவசாயிகள் மகிழ்ச்சி

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம், பண்ணாகம் ஆகிய இடங்களில் நடுகை செய்யப்பட்ட உருளைக் கிழங்கை வாங்குவதில் தனிப்பட்ட வியாபாரிகள், விற்பனவு இலாகாவினர் கொள்முதல் செய்வோர் மற்றும் சில வியாபார நிலையங்களைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள் பெரும் போட்டி போட்டு கிழங்கைக் கொள்முதல் செய்ய முன் வந்துள்ளனர். இதனால் கிழங்கு நடுகை செய்தவர்கள் தங்கள் கிழங்கை கிண்டி விற்பனை செய்வதில் மிகவும் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

## தடை

குரும்பசிட்டி, செவ்.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரி நோயாளர் விடுதிகளுக்குள் அனுமதி பெற்றுக்கொள்ளாது உணவு பண்டங்களை நோயாளருக்கு விற்பனை செய்வதை வைத்திய அதிகாரிகள்தடை செய்துள்ளனர்.

இத் தடைஉத்தரவைமீறி நடப்பறர்களை ஆஸ்பத்திரி காவலாளிகள் கைது செய்யும் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## புதிய உறுப்பினர்

சங்கானை, செவ்.

சங்கானை கிழக்கு நிற்சாமம் சரஸ்வதி சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம் திரு. எம். கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். கணேஷ், உபதலைவர்: கா. இராசையா, இணைக்காரியதரிசிகள்: கே. விக்னராசா, வி. நாகராசா, தனாதிகாரி: சி. சிங்கராசா, போஷகர்கள்: பி. மாணிக்கம், வி. நாகலிங்கம். 5 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மீண்டும் புகார்

சுழிபுரம், செவ்.

உரியநேரத்தில்பஸ்கிடைக்காததினால் சுழிபுர பிரயாணிகள் பெரிதும் கஷ்டமுறுகின்றார்களாம். இது பற்றி பல தடவை இ. போ. சபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக் அறிவித்தபோதும் எது வித பயனும் கிடைக்கவில்லையாம்,

இது பற்றி சுழிபுரம் பஸ் பிரயாணிகள்சங்கம் வட பிரதேச இ. போ, சபைக்கு மீண்டும் புகார் செய்துள்ளது.

## பிரயாணநூல்

சுழிபுரம் செவ்வாய்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைஇரண்டாம் வருட ஆசிரிய மாணவர்கள் இம் மாதம் 23-ம் திகதி இலங்கை சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளவிருக்கின்றனர். இச் சுற்றுலாவைமுன்னிட்டு ஒரு புதிய முன் மாதிரியாகசுற்றுலா சம்பந்தமாகஒருகை நூல் வெளியிட்டனர். இந் நூல் பிரயாணசம்பந்தமானசகல விபரங்களையுமமற்றும் பொருத்தவல்களையும் விரிவாகக்கொண்டதாகவிருக்கிறது.

## இடமாற்றம்

உடுவில். செவ்.

சுன்னாகம் பட்டின சபை மூவருக்கு இடமாற்ற உத்தரவு கிடைக்கப்பட்டுள்ளது.

பட்டினசபையின் பிரதம எழுது வினைஞராகக்கடமை யாற்றும் திரு. எஸ். செல்வநாயகம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கும், பட்டின சபை ஓவசியர் திரு. சிவபாலசிங்கம் ஏருவூர் பட்டின சபைக்கும், மின்சாரப்பகுதி [illegible] சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

## திருப்பாடுகள்

அடம்பன், செவ்.

முருங்கன் கிறிஸ்துஇராசா கோவிலில் சித்திரை 1-ம், 2-ம் தேதிகளில் பாஸ்குப் பண்டிகை தொடங்கி யேசுநாதர்உயிர்த்தெழுதல்வரை திருப்பாடுகள் நடத்திக் காண்பிக்கப்பட்டது.

வணக்கத்துக்குரிய சேவியர் குருஸ் குருவானவர் மேற்பார்வையில்விழாநடைபெற்றது. மன்னாரின் பல பகுதிகளிலிருந்து ஏராளமான மக்கள் விழாவிற் பங்குபற்றினர்.

## கமிஷனாலும் முடியவில்லை

உடுப்பிட்டி, செவ்,

உடுப்பிட்டிக் கிராம சபை அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருந்த 4 தேன் போத்தல்களும், ஒரு டெற்றோல்போத்தலும் மாயமாய் மறைந்துவிட்டதைக் கண்டு பிடிப்பதற்காக நியமிக்கப்பட்டமூவரடங்கிய விசாரணைக் கமிஷன் விசாரணையிலும் அவைமறைந்தவிதம் கண்டுபிடிக்கமுடியவில்லையாம்.

## கோரிக்கை

அச்சுவேலி, செவ்வாய்

இது வரைகாலமும் அச்சுவேலி கிறிஸ்தவகல்லூரி என வழங்கிவந்த பெயரைமாற்றம்செய்து மகாவித்தியாலயம் எனப் பெயரிட வேண்டுமென்று மேற்படிகல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்விப்பகுதியாரை வேண்டியுள்ளது.

இது சம்பந்தமான தீர்மானத்தின் பிரதியொன்று கோப்பாய் எம். பி. திரு.சி.கதிர்வேற்பிள்ளைக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## அதிசய ஆட்டுக்குட்டி

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம்பறாளை றேட்டில் வசிக்கும்கந்தன் வேலன்என்பவருக்குசொந்தமான ஆடு ஓர்அதிசயஆட்டுக்குட்டியை ஈன்றுள்ளது.

தலையில் ஓர்கொம்பும் ஒருபக்கமாகவாயும் இருக்கின்றன. உயிருடன்இருக்கும்இக் குட்டியைபார்ப்பதற்கு அதிசயமாகவிருக்கிறது.

## கொழும்பில் பிரார்த்தனை

கொழும்பு, செவ்.

சுட்டுக்கொல்லப்பட்ட அமெரிக்க நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் மரணத்தை யொட்டி பம்பலப்பிட்டி சென். மேரிஸ் தேவாலயத்தில் இன்று காலை நடைபெற்ற பிரார்த்தனையில் இலங்கையிலுள்ள அமெரிக்கத்தூதரும் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

கோப்பாய்பாடசாலைகள்

## விளையாட்டுப் போட்டி


யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் வட்டார விளையாட்டுப் போட்டி அண்மையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிமைதானத்தில்நடைபெற்றபோது ஆவரங்கால் மெதடிஸ்ற்மிஷன் பாடசாலை 123 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப்பெற்றது. இரண்டாம்இடத்தை வழலாய் அ. மி. பாடசாலையும் மூன்றும் இடத்தை அச்சுவேலி சென் திரேசா பாடசாலையும் பெற்றது.

கோப்பாய் வட்டார கல்வி அதிகாரி தலைமையில் நடந்த விழாவில் திருமதி. வே. சண்முகநாதன் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி [illegible]

திரு. த. திலநாயகம், திரு செ. நடராசா முதலியோரும் உரைநிகழ்த்தினர்.

## சேவைநலம் பாராட்டு



யாழ்ப்பாணம், புதன்

நாவாந்துறைத் தலைமை ஆசிரியராக இருந்து இவ் வருடம் பெப்ரவரி 28-ம் திகதி இளைப்பாறிய திரு. ச. நீக்கிலாப்பிள்ளைக்கு இம் மாதம் 3-ம் திகதி யாழ். புனிதசாள்ஸ் பாடசாலையில் சேவைநலன் பாராட்டு விழா நடாத்தப்பட்டது. இளைப்பாறிய ஆசிரியர் திரு. வீ. எம். ஆசீர்வாதம் ஜே. பி. தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"ஆசிரியச் சேவைக்குத் தம்மை அர்ப்பணித்து கடமை தவறாது ஒழுகிய திரு. ச. நீக்கிலாப்பிள்ளை ஆசிரியரைதற்கால ஆசிரியர்கள் பின்பற்றி நடக்க வேண்டும். ஆசிரியர் படிப்பித்தலில் மாத்திரம் தமது சேவையைச் செய்யவில்லை. ஒழுக்கம் உடற்பயிற்சி விளையாட்டு, நாடகம் இவற்றில் மாணவர்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்து அவர்களைப் பல துறைகளிலும் முன்னேற்றினார்."

பழைய மாணவரும்ஆசிரியருமான திரு, ரீ. விக்ரர்யேசுகையில், நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழிலே விஞ்ஞானம் போதிக்க முடியாது என்று கல்விமான்களே எண்ணிய காலத்தில் 1936-ம் அண்டிலிருந்து உயர் தர வகுப்புகளில் தமிழில் விஞ்ஞானம் உயர்தர கணிதம் ஆகியபாடங்களைக்கற்பித்து மாணவர்களை இப் பாடங்களில் சித்தியடையச் செய்தார். என்று கூறினார்.

யாழ் வட்டார தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் இ. குமாரசாமி இளைப்பாறும் ஆசிரியர்களுக்கு ஆசிரிய சங்கமே பாராட்டு விழாக்களை நடத்த தாம் முயற்சியெடுப்பதாக குறிப்பிட்டார். வண. பிதாதேவராசா, திரு. தா. சங்கரப்பிள்ளை திரு, இ. குமாரையா ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

மன்னாரில்

## இணுவில் வென்றது

புன்னாலைக்கட்டுவன் செவ்வாய்

இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்திற்கும் மன்னார் புனித சென். யூலியஸ்கழகத்துக்கும் இடையில் மன்னார் சென். யூலியஸ் மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான உதைபந்தாட்டப் போட்டியில் இணுவில் கோஷ்டி 3:2 கோல்களால் வென்றது.

இணுவில் கோஷ்டியில் மத்திய பின்னணி வீரர் இ. தங்கராசா, கப்டன் இலகுநாதன் மகேந்திரன் ஆகியோர் திறமையாக விளையாடினர்.

மன்னார் கோஷ்டியின் கப்டன் ஏ. யத்திறாதர் பிகிருடோவின்விளையாட்டுப்பாராட்டைப் பெற்றது. திரு. எம். ராஜாபிகிருடோ மத்தியஸ்தம்வகித்தார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வண. இல்லறி ஜெயநேசன் சுவாமியார் வீரரைப் பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் உற்பத்தியில் தன்னிறைவு காண I. R. — 8 நெல்லினம் வழி கோலும்

முன்னாள் மந்திரியும் முன்னாள் சாவகச்சேரி எம். பி. யுமான திரு. வி. குமாரசாமி நெல் உற்பத்தி பற்றி பின்வருமாறு கூறுகின்றார்:-

## நடுகை நேரம்

அக்கம் பக்கத்திலுள்ள வயல்களில் நெற்பயிர் முதிர்ந்து வரும் அதே சமயத்தில் இந்த இன நெல்லும் முதிரவேண்டும். இதை வளர்ப்பதற்கு இன்ன காலம் தான் சிறந்ததென்றில்லை. எக்காலத்திலும் வளரும். சுமார் 120 நாட்களில் அரிவு வெட்டலாம்.

## நாற்றுப்படுகை

நாற்றுப் படுகையில் 100 ருத்தல் சுப்பர் பொஸ்பேற்றுகளும் 50, 60 ருத்தல் முறியேட் ஒவ் பொட்டாசும், 1 அந்தர் அமேனியா சல்பேட்டும் 1 ஏக்கர் நாற்றுப் படுகையில் போடவேண்டும் 10 நாட்களுக்குப்பின் என்றெக்ஸ் அல்லது பொலிடோல் அடிக்கவேண்டும். நாற்று நடுவதற்குமுன் விதைகளை செறஸன் வெட்டில் நனைக்கவேண்டும்.

## வயல் தயாரிப்பு

நடுவதற்கு 10 நாட்களுக்கு முன் வயலை உழுது கட்டைகளையும் வைக்கோலையும் மண்ணோடு சேர்க்க வேண்டும். நாற்று நடுவதற்கு சற்றுமுன்பாக 2 அந்தர் அமேனியம் சல்பேட் அல்லது 100 ருத்தல் ஊரியாவும், 100 ருத்தல் சூப்பர் பொஸ்பேட் அல்லது 140 ருத்தல் சாபோஸ் பொஸ்பேட்டும் 100 ருத்தல் முறியேட் ஒவ் பொட்டாசும் சேர்க்கவும். செயற்கை பசளைகளை நன்றாக பரக்கத் தூவி மறு உழவு உழ வேண்டும்.

## நாற்றுநடுகை

3 வாரக்கன்றுகளை 6''X8'' அகல நீளத்தில நடவேண்டும். ஒன்றுமுதல்மூன்று கன்றுகளை ஒன்றாக நடலாம். இந் நெல்லினம் வீச்சுவிதைப்புக்கும் உகந்தது.

## நீர்வசதியும் மேலதிக பசளையும்

வயல் முழுவதிலும் ஒன்று முதல் இரண்டரை அங்குல தண்ணீர் எப்பொழுதும் இருக்க வேண்டும். பயிர்கள் தடித்தபச்சையாயில்லாவிட்டால் 40 முதல் 60 ருத்தல் நைற்றெஜின் பசளை மேலே போடலாம். இதற்காக 2 அந்தர் அமேனியம் சல்பேட் அல்லது 50 முதல் 100 ருத்தல் ஊறியா உபயோகிக்கலாம்,

## களை, கிருமி ஒழிப்பு

களைகளை கையால் பிடுங்கியும் கிருமி நாசினி அடித்தும் அழிக்க வேண்டும். இருந்தும் நாற்று நடுகைக்கு 2 வாரம் கழித்து என்ட்ரெக்ஸ் அல்லது பொலிடோல் அடிக்கவும். 25 நாட்களுக்குப்பின் பி. எச். சி. 6 வீதம் கும்மா குறிகைகளை உபயோகிக்கவும். 1R-8 நோய்க்கு வசப்பட்டது. ஆகையால் தக்க சமயத்தில் மருந்து அடிக்கவேண்டும்.

கவனமாகப் பார்த்து நோய்களையும் தடுத்தால் இவ்விளைநெல் ஏக்கருக்கு 200 புசல் விளையும்.

இந்த அற்புத நெல்லினத்தை பிலிப்பைன்ஸ் தீவிலுள்ள சர்வதேசஅரிசி ஆராய்ச்சி கழகத்தில் கண்டுபிடித்துள்ளார்கள். பொதுமக்கள் இந் நெல்லை உற்சாகமாக வளர்த்தால் 1970-ம் ஆண்டளவில் இலங்கை நெல் உற்பத்தியில் தன்னிறைவுகண்டு விடும்.

## ''சிறைக்கே அனுப்புக''

ஊர்காவற்றுறை, செவ்

பிரயாணச் சீட்டின்றி ரயிலில் பிரயாணஞ்செய்த நாவலப்பிட்டியைச் சேர்ந்த எம். சிவலிங்கம் என்பவருக்கு நீதிபதி திரு எம். ஜமீல் 25 ரூபா அபராதம் அல்லது 2 வாரச் சிறைத் தண்டனை விதித்தார்.

அபராதம் செலுத்த இயலாதென எதிரி கூறவே நீதிபதி 2 வாரச் சிறைத் தண்டனை விதித்தார். தன்னைச் சிறைக்கு அனுப்பும்படியும் எதிரி நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

## ஈஸ்டர் திருநாள்

பண்டத்தரிப்பு. செவ்,

இளவாலை புனித நீற்ரு தேவாலயத்தில் ஈஸ்டர் திருநாள் கொண்டாடப்படவிருக்கிறது. பெரிய வியாழன் பெரிய வெள்ளி, பெரியசனி ஆகிய நாட்களில் விசேட ஆராதனை வழிபாடுகள் இடம் பெறும்.

இளவாலை உதவிக் கட்டளைக்குரவர் வண. நியோஜிலஸ் ஆராதனைகளை நடாத்துவார்.

## பெரியபுராண விரிவுரை

யாழ்ப்பாணம், புதன்

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் ஆதரவில நடைபெற்று வரும் பெரிய புராண ஆய்வுரை வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கைதடி முத்துக்குமாரசுவாமி கோவிலில் ''சேரமான் தோழர்'' என்ற பொருள் பற்றி திரு. சி. சரவணமுத்து உரை நிகழ்த்துவார்.

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், புதன்

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழாவும் மாசபைக் கூட்டமும் புது வருடத் தினத்தன்று நடைபெறவிருக்கிறது. புதிய உத்தியோகத்தர் தெரிவு, சைவமகாநாடு பற்றிய கருத்தரங்கு. சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகிய பிரதான நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 10-4-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-15, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 அதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-45 பாவளம், 7-00 இசைச்சித்திரம், 7-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-45 தோற்த இசை.

# மாணவருக்கு உடுவில் எம். பி. விடுக்கும் வேண்டுகோள்

உடுவில், செவ்வாய்.

''எமது நாடு உணவுப் பொருட்களுக்காக வருடா வருடம் பல கோடி ரூபா பணத்தை வெளிநாடுகளுக்குக் கொடுக்கிறது. இந்நிலை நீடிக்குமானால் எம்மை இருள் சூழ்ந்த எதிர்காலமே எதிர்நோக்கும். உணவுத் துறையில் நாடு தன்னிறைவு பெறவேண்டுமானால் இதற்காக அரசாங்கம் மேற்கொண்டுவரும் நல்ல திட்டங்களை அமுல் நடத்த மாணவர்களாகிய உங்கள் ஆதரவு அவசியம். இதனால்தான் நமது பணம் மிச்சப் படுத்தமுடியும்.''

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைப் பெற்றோர்-ஆசிரியர் தினவிழா மேற்படி பாடசாலையில நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உடுவில் எம். பி திரு. வி தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

தலைமையாசிரியர் திரு. சி கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உடுவில் எம். பி, கல்லூரி வளர்ச்சிபற்றிக் குறிப்பிட்டு இதற்கு ஆசிரியரும் மாணவரும்தான் காரணமென்றார்.

இவ்விழாவில் உடுவில் வட்டாரக் கல்வி ஆலோசகர் திரு. சி. இராசா, திரு. சி. முத்துலிங்கம் திரு. கா. சிதம்பரநாதன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

மாணவ மாணவிகளின் பேச்சு, பாட்டு, நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.


நவாலியூர்

பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக்குருக்கள் அவர்கள் கூறுகிறார்கள்:

**சுந்தரம் பிறதர்ஸ்**

ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்

**பச்சை சந்தனம்**

கோவில் தேவைகட்கும் மற்றும் மங்களக் காரியங்களுக்கும் சிறந்தது.

இறைவன் திருமேனியில்

**சந்தனக் காப்பிட்டு**

அவனின் திருவருளைப் பெறுவதற்கும் சிறந்த வஸ்துவாக அமைகிறது.

**சுந்தரம் பிறதர்ஸ்**

(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)

73, மின்சாரநிலையவீதி—யாழ்ப்பாணம்


# கீழைநாட்டு மந்திரதந்திரங்கள் பற்றி நீதியரசர் தம்பையா

உடுவில், திங்கள்

''விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு புதிய புதிய பல நவீன சாதனங்களும் கண்டுபிடிப்புகளும இன்றைய உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞானத்துறையில் உலகத்தவர் எவ்வளவு தூரம் இன்று அக்கறையும் ஆர்வமும் காட்டுகின்றார்களோ அதேபோன்று இற்றைக்கு பல்லாண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்கள் மந்திர தந்திர சாஸ்திரங்களை கற்பதிலும் அவற்றில் புதிய கண்டுபிடிப்புகளை ஏற்படுத்துவதிலும் தீவிர ஆர்வமும் கவனமும் செலுத்திவந்தார்கள். மந்திர தந்திர சாஸ்திரங்களும் ஒரு விஞ்ஞானம்தான். விஞ்ஞானத்தின் மூலம் நாம வெளிப்படையாக காணுவதை மந்திர தந்திர சாஸ்திரங்கள் மூலம் அகக்கண்ணால் பார்க்கிறோம்''.

சுன்னாகம் பட்டின சபை ஆதரவில் சேர் பொன். இராமநாதன் வீதியிலுள்ள நூல்நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் ஆராய்வுக்குழு கருத்தரங்க வட்டத்தில் 'கீழை நாட்டு மந்திர தந்திர சாஸ்திரங்கள்' பற்றி உரைநிகழ்த்திய உயர்தர நீதிமன்ற நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா கியு. சி, மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் முன்னாள் அதிபரான திரு சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் டாக்டர் தம்பையா மேலும் பேசுகையில், ''எம்மால் காண முடியாதவற்றையெல்லாம் இல்லை என்றும், பொய் என்றும் கூறமுடியாது. எவ்வோராலும் எல்லாவற்றையும் காணமுடியாது. சோதிடம் பார்த்தல், வாக்கியம் வாசித்தல், குறிசொல்லுதல் போன்றனவற்றை நம்புதல்வேண்டும். உண்மையான முறையில் இவற்றை பயின்றால் அவற்றில் சித்திபெறமுடியும். என்றார்.



தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நாளை வியாழக்கிழமை மாலை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடாத்தும் நாட்டிய, நாடகவிழாவில் செல்வி லீலா நாராயணனின் பரதநாட்டிய நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

உருளைக்கிழங்கு உற்பத்தி

# 67-68-ல் யாழ். மாவட்டத்தில் 4 ஆயிரம் தொன் அறுவடை

## வடபகுதி விவசாய அதிபர் பெருமிதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடம் காலபோக உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் ஏக்கருக்கு சுமார் 7000 ரூபா தொடக்கம் 10 000 ரூபாவரை மொத்த லாபம் அடைத்திருப்பார்களென யாழ்ப்பாண விவசாய அதிபர் திரு. என். ஜெயசீலன் தெரிவித்தார்.

1962-ம் ஆண்டின் ஆரம்பத்தில் 2 ஏக்கர் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை இந்த வருடம் 524 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டதென்றும் யாழ். விவசாயிகளின் திறமையினால் ஏற்பட்ட இந்த எதிர்பாராத முன்னேற்றம் பற்றிப் பெருமைப் படவேண்டுமென்றும் திரு. ஜெயசீலன் சொன்னார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1962—1963 ஆண்டின் இடைக்காலத்தில் 2 ஏக்கர் நிலத்திலும், 1963—1964 ஆண்டு இடைக்காலத்தில் 5 ஏக்கர் நிலத்திலும், 1964—1965 ஆண்டு இடைக்காலத்தில் 15 ஏக்கர் நிலத்திலும், 1965—1966 ஆண்டு இடைக்காலத்தில் 70 ஏக்கரிலும் 196 —1967-ல் 130 ஏக்கரிலும், 1967—1968-ல் 524 ஏக்கரிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் படிப்படியாக உருளைக்கிழங்குச் செய்கை உயர்ந்துள்ளது என்றும் 1967—1968-ல் உருளைக்கிழக்குப் பயிர்ச் செய்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 4,000 தொன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டிருக்கலாமென்றும் திரு. ஜெயசீலன் தெரிவித்தார். [வி நி·

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்முறையும் தபால்பகுதி சாம்பியன்?

## இன்று தபால்பகுதியுடன் பொலிஸ் மோதும்

(நமது நிருபர் எம். எஸ். துரைராஜா)

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் அரசாங்க இலாகாக்களுக்கிடையேயான லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் மோதல் இன்று மாலை 4-30 மணியளவில் யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

இச்சுற்றுப் போட்டியின் சாம்பியன் வெற்றிக்கிண்ணத்தைப் பல வருடங்களாகத் தட்டிக்கொண்டு வரும் யாழ். தபாற்பகுதியினர் இம்முறை யாழ். பொலிஸ் பகுதியினருடனே சாம்பியன் போட்டியில் சந்திக்கின்றனர். இதுவரை எவரிடமும் தோல்வியே காணாத யாழ். தபாற்பகுதியினர் இம்முறையும் சாம்பியன் கிண்ணத்தைப் பொலிஸ் பகுதியினரிடமிருந்து தட்டிக்கொள்வார்களென யாழ். உதைபந்தாட்ட விசிறிகள் மத்தியில் பேச்சுக்கள் அடிபடத் தொடங்கியுள்ளன. எனினும் யாழ். பொலிஸ் கோஷ்டியிலும் சுறுசுறுப்பான ஆட்டக்காரர்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சாம்பியனாகும் கோஷ்டி இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகராவிடம் தமது சாம்பியன் வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக்கொள்ளும்.

இப்போட்டிக்குரிய ஒழுங்குகளை மேற்படி சங்கக் காரியதரிசி திரு. ஈ. கே. குமரையா கவனித்துவருகிறார்.

### தபால் கோஷ்டியினர்

ரி. தம்பித்துரை (காப்டன்), எஸ். குமாரசாமி, வி. சூசைப்பிள்ளை, ஏ. அரசகுமார், எஸ். தர்மலிங்கம், ரி. தந்திரித்துரை, எஸ். சண்முகநாதன், எஸ். கிறிஸ்மிராசா, எஸ். எம். புலேந்திரன், எம் சந்தியாபிள்ளை, என். மாசிலாமணி.

### பொலிஸ் கோஷ்டியினர்

ஏ. சி. டயஸ் [காப்டன்], டி. டபிள்யூ. கிறில், எச். கே. சந்திரதாச, ரி. ஆர். சமிடோன், ரி. ஈ. கே. கசீம், ஐ. அன்ரனிப்பிட, கே. எம். டி. ஜயவர்த்தன, கே. எம். அன்ரனி, எம். ஆர். அன்வர், எம். கசீம், என். முனசிங்கா.

### நீச்சல் தடாகம்

சுன்னாகத்தில் இளைஞர்களின் நலன்கருதி நீச்சல்தடாகம் ஒன்று மிகவிரைவில் கட்டப்படவிருக்கின்றது. சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

### கழக நிர்வாகிகள்

'கயிற்ஸ் றேஞ்சேஸ்' விளையாட்டுக் கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தில் பின்வருபவர்கள் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாதுகாவலர்- திரு. இ. மாணிக்கம், தலைவர்- திரு. ஈ. இரத்தினராரா, செயலாளர்- திரு. கே. சிவபாலன், நிர்வாகக் காரியதரிசி திரு. ஏ. பத்திநாதன். விளையாட்டுப் பகுதித் தலைவர்- திரு. சேவியர்.

## 'நல்ல குணங்களை விளையாட்டு ஏற்படுத்தும்'

முல்லைத்தீவு, செவ்.

மாணவர்கட்கு கல்வி எவ்விதம் அவசியமோ அதேபோல் விளையாட்டும் அவசியம். இதனால்தான் பாரதியார் 'ஓடிவிளையாடுபாப்பா' என்ற பாடலைக்கொண்டு அறிவுறுத்தியுள்ளார். மாணவர்கள் திடகாத்திரமுள்ளவர்களாகவும் சுகதேகிகளாகவும் திகழ்வதற்கு விளையாட்டு அவசியம். மேலும் விளையாட்டின்மூலம் மாணவர் வெற்றிதோல்வி இரண்டையும் சமமாக ஏற்று நடப்பதுபோல வாழ்க்கையிலும் செல்வம் — வறுமை இரண்டையும் சமமாக மதித்து வாழவேண்டும். கோபம், பொறாமை அகன்று ஒற்றுமை, சமத்துவம் என்பன விளையாட்டுமூலம் கிடைக்கும் அரும்பெரும் பேறாகும்.''

இவ்வாறு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடந்த கரைதுறைப்பற்று— வவுனியா வடக்கு கனிஷ்ட பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியின்போது பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய முல்லைத்தீவுக் காரியாதிகாரி திரு. சொ. கணேசநாதன் கூறினார். வவுனியா கல்வி ஆலோசகர் திரு. சோ. கனகசபாபதி தலைமைதாங்கினார்.

நெடுங்கேணி கனிஷ்ட மகாவித்தியாலயம் 102 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தையும், புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலை 96 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தையும், முல்லைத்தீவு சைவவித்தியாசாலையும், இரணப்பாலை றோ. க. பாடசாலையும்தனித்தனி 44 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றது. போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி ருபராணி கணேசநாதன் பரிசில்களை வழங்கினார்.

யாழ்.மாவட்ட

## அமெச்சூர் விளையாட்டுச்சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட அமெச்சூர் விளையாட்டுச்சங்கத்தின்வருடாந்தப்பொதுக் கூட்டம் யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்ட முடிவில் நடைபெற்ற புதியநிர்வாகசபைத் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: டாக்டர் கே. இராசையா, உப தலைவர்கள்: திருவாளர்கள் எம். ஜே.சி.துரைசிங்கம், டி.ஸ்ரீநிவாசன், ஏ.சுப்பிரமணியம், வி.ரி.சிவலிங்கம், சி. இராசதுரை. காரியதரிசி; திரு. கே. வதுக்குலசிங்கம், உபகாரியதரிசி: திரு. எம். எஸ். ஜிப்றி. தனாதிகாரி, திரு. ஏ. சண்முகநாதன், கணக்குப் பரிசோதகர்: திரு. வி ரி. கணேசலிங்கம், அங்கத்தவர்கள்: திரு.ரி நடராசா, திரு. ஐ.பி.மாணிக்கம். இலங்கை அமெச்சூர் விளையாட்டுச்சங்கத்தின் பிரதிநிதிகள்: திரு. கே. வதுக்குலசிங்கம், திரு. வி. ரி. [illegible]

கிழக்கு மாகாண கைப்பந்தாட்டப்போட்டி

## திருமலை 'சைனிங்ஸ்டார்' சாம்பியனாகியது

திருக்கோணமலை, செவ்.

ஹஜ்ஜுப்பெருநாளை முன்னிட்டு காத்தான்குடி விளையாட்டுக் கழகத்தினர்நடாத்திய விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான கிழக்கு மாகாண கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில்திருக்கோணமலைசைனிங்ஸ்டார் விளையாட்டுக் கழக கோஷ்டி சாம்பியனானது.

கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி காத்தான்குடி விளையாட்டுக் கழக மைதானத்தில் சைனிங் ஸ்டார் கோஷ்டிக்கும் மட்டக்களப்பு மாநகரமன்ற கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது. மாநகரமன்ற கோஷ்டியினர் மட்டக்களப்பு மாவட்ட சம்பியன் கோஷ்டியினராவர்.

போட்டிஆரம்பமாவதற்கு முன் மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினரும், மாநகரசபை மேயருமான திரு. எஸ். இராசதுரை மாநகரமன்ற கோஷ்டியினரை உற்சாகப்படுத்துமுகமாக மைதானத்துள் இறங்கி பயிற்சியிலீடுபட்டார்.

முதலாவது ஆட்டத்தில் மாநகரமன்ற கோஷ்டியினர் மிகவும் திறமையாக விளையாடி முதலாவது ஆட்டத்தில் வெற்றியீட்டினார்கள்.

அடுத்து நடந்த இரு ஆட்டங்களிலும் சைனிங் ஸ்டார் கோஷ்டியினர் தமது விளையாட்டுத் திறமையைக் காட்டி மாநகரமன்ற கோஷ்டியை தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டார்கள்.

சைனிங்ஸ்டார் கோஷ்டியின் மின்னலடி வீரர்களென புகழ்பெற்ற கனகரெத்தினம், சிவஞானசுந்தரம் ஆகியோரும் சைனிங்ஸ்டார் காப்டன் அபிமன்னசிங்கம், இராசேந்திரம் ஆகியோரும் தங்களது விளையாட்டுத்திறமையினால் ரசிகர்களினது பாராட்டைப் பெற்றனர்.

போட்டிக்கு திரு. எஸ். ஏ. துரைசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

காத்தான்குடிக்கு சென்ற சைனிங்ஸ்டார் கோஷ்டியினருக்கு, செனிங்ஸ்டார் வி. க. செயலாளர் திரு. கே: எஸ். இக்னேசியஸ் தலைமை வகித்தார்.

### செக்கோஸிலே...

விரிவுரையாளர் ஒருவரே நாட்டின் புதிய வெளியுறவு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனநாயக அடிப்படையில் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களை அமுல் நடத்துவதில் மந்திரிசபை உறுதியான நடவடிக்கை எடுக்குமெனத்தெரிகிறது.


இன்றே வாங்குங்கள்

சுத்தமான

காவடி மார்க் கற்பூரம்




இலங்கையில் தயாரிக்கப்படும், காவடி மார்க் கற்பூரம் இறக்குமதி செய்யப்படும் கற்பூரங்களை விடசிறந்தது. எரியும்போது தூய்மைமிக் கநறுமணத்தை நல்குவதோடு, அதிக நேரம் நின்று எரியும் தன்மை உள்ளது. சுத்தமான விளைவு கற்பூரத்தினால் தயாரிக்கப்படும் காவடி மார்க் கற்பூரங்கள் தினசரி பூஜைகளுக்கும் ஆலய வழிபாட்டிற்கும் மிகச் சிறந்ததாகும்.

காவடி மார்க் கற்பூரம் இப்பொழுது 3 அவுன்ஸ் ¼ இரு. ½ இரு. பக்கெட்டுகளில் கிடைக்கும். ஒவ்வொரு பக்கெட்டுகளிலும் 128 வில்லைகள், 960 வில்லைகள் கொண்ட டின்களிலும் கிடைக்கும்.

குறைந்த விலையில் எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:-

M. மாணிக்கவாசகம் அன் கோ.

கற்பூரத் தொழிற்சாலை

கொழும்பு 15.

ஆபீஸ்:

106-2/1, ரெக்லமேசன் ரோட், கொழும்பு-11.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கிங்' சூடுபட்ட அறை ஞாபகார்த்த நிலையமாகும்

## ஆயிரக்கணக்கான மக்கள் மௌன அஞ்சலி

வாஷிங்டன், ஏப்ரல் 9

நீக்ரோ தலைவர் மார்ட்டின் லூதர்கிங் சூடுபட்ட ஒட்டல் அறை அவரது ஞாபகார்த்த நிலையமாக இருந்துவரும்.

டாக்டர் சுடப்பட்டபோது மெம்பிஸ் நகரில் தங்கியிருந்த ஒட்டலின் இரண்டாவது மாடியிலுள்ள அவரது அறையை அவருடைய ஞாபகார்த்தமாக விடுவதென்றும் வேறு எவருக்கும் வாடகைக்கு விடுவதில்லையென்றும் அந்த ஒட்டலின் அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள்.

காலஞ்சென்ற நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் அகால மரணம் குறித்து அஞ்சலி செலுத்துமுகமாக மௌன ஊர்வலம் ஒன்றை நடத்த ஆயிரக்கணக்கான மக்கள் இன்று மெம்பிஸ் நகரில் கூடினார்கள்.

இதற்கிடையில் டாக்டர் கிங்கின் சடலம் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அவருடைய சொந்தஊரான அட்லண்டா நகருக்கு கறுப்பர் வெள்ளையர் என்று பேதமின்றி ஆயிரக்கணக்கான மக்கள் யாத்திரை செல்கின்றார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கிங்கின் பூதவுடலுக்கு மரியாதை செலுத்தியிருக்கிறார்கள்.

பல்கலைக் கழகங்களில்

## ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படும்

### உயர்கல்விசபை செய்துள்ள முடிவு

கொழும்பு, திங்கள்

பல்கலைக்கழக மாணவர்கள் இனிமேல் ஆங்கில கேள்வித்தாள் ஒன்றையும் கட்டாயம் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

பல்கலைக்கழகங்களில் படித்து வெளியேறும் மாணவர்கள் ஆங்கிலத்தையும் கட்டாயபாடங்களில் ஒன்றாக எடுத்து சித்தியடைய வேண்டுமென்று தேசிய உயர்கல்வி சபை முடிவு செய்திருக்கின்றது.

பட்டம் பெற்று வெளியேறும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு சிறப்பாக இருக்க வேண்டும் என்றும், ஆங்கிலக் கல்வியின் தரத்தை நாட்டில் உயர்த்தவேண்டுமென்ற நோக்கத்துடனும் தேசிய உயர்கல்விச்சபை இந்த முடிவை செய்திருக்கின்றது. ஆங்கிலத்தையும் ஒரு பாடமாக எடுத்து சித்தியடையாத மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்படமாட்டாதென்றும்கருதப்படுகின்றது.

இது விஷயமாக இறுதியான முடிவு எடுக்கப்படு முன்னர் தேசிய உயர்கல்விச்சபை கல்வி இலாகாவுடன் ஆலோசனைகளை நடத்தும். தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டபின்னர் பல்கலைக் கழகங்களில் சேரும் மாணவர்களுக்கு ஆங்கில பாடங்களில் சித்தியடைய வேண்டியது பற்றி முன்கூட்டியே அறிவிக்கப்படும்.

மெம்பஸ் நகரில் டாக்டர் கிங் சுடப்பட்ட ஒட்டல் அறை இனிமேல் எவருக்கும் வாடகைக்கு விடப்படமாட்டாது. அவருடைய ஞாபகார்த்தமாக அந்த அறை காலியாகவே இருக்குமென்றும் டாக்டர் கிங்கின் ஞாபகார்த்த சின்னங்கள் அங்கு வைக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜோர்தானுக்குள் மீண்டும் இஸ்ரேல் துருப்புகள்

கெய்ரோ, ஏப்ரல், 8

ஜோர்தான் எல்லைகளைக் கடந்து இஸ்ரேல் துருப்புகள் அத்துமீறிப் பிரவேசித்ததாக ஜோர்தான் இன்று குற்றஞ்சாட்டியது. இஸ்ரேலிய பாரா துருப்புகள் ஜோர்தானுக்குள் இறங்கியதாகவும் அவை தாழ்ந்த பிரதேசங்களை நோக்கி முன்னேறுவதாகவும் இருபகுதியினரிடையே கடும் சண்டை நிகழ்ந்ததாகவும் அம்மான் ரேடியோ அறிவித்தது.

### கோரமில்லை சபை ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

பிரதிநிதிகள் சபை இன்று கூடிய அரைமணி நேரத்துக்குள் ஒத்திவைக்கப்பட்டது. தனிப்பட்ட அங்கத்தவரின் பிரேரணைகள் இன்று எடுக்கப்படவிருந்தன. கோர இல்லாததனால் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

### புதுடில்லியில் பேச்சுவார்த்தை?

#### ஹனோய் விருப்பம்

புதுடில்லி, ஏப்ரல் 8

வியட்நாம் சமாதான பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் அல்லது ரங்கூனில் இடம்பெறுவது வடவியட்னாமுக்கு ஒப்புடையதாகவிருக்குமென ஹனோய் செய்திகள் தெரிவிக்கின்றன.

வியட்நாம் பேச்சுகள் புதுடில்லியில் நடைபெறுவதை இருதரப்பாரும் விரும்பினால் இந்திய அரசாங்கம் அதை வரவேற்று உதவும்என்று இந்தியவட்டாரங்கள் தெரிவித்தன.

### சோஷலிச முன்னணி கண்டனம்

யாழ்ப்பாணம் செவ்.

150 வருடங்களுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டு வந்த யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கான மையவாடியை சுகாதார அமைச்சர் மூடிவிட உத்தேசித்திருப்பதை இஸ்லாமிய சோஷலிஷ முன்னணியின் யாழ்ப்பாணக் கிளை கண்டித்திருக்கிறது.

### பெண் கைது

குரும்பசிட்டி, திங்கள்

உறவினர் ஒருவரின்வீட்டிலிருந்துதாலிக்கொடி,சாப்புகள்,சங்கிலிஆகிய ஆபரணங்களையும் 1500ரூபா ரொக்கப்பணத்தையும் களவாடிச் சென்றதாகக் கருதப்படும் ஒருவரை சுன்னாகம் பொலிசார் கைது செய்துள்ளனராம்.

கைதடியை வசிப்பிடமாகக்கொண்ட இப் பெண் உரும்பிராயில் உள்ள அவரது இனத்தவருடைய வீட்டில் தங்கிஇருந்தாராம். வீட்டில் ஒருவரும்இல்லாதநேரத்தில் இவ் பெண் நகைகள், ரொக்கப்பணம் ஆகியவற்றை திருடி சென்றதாக சுன்னாகம் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இப்புகாரைத்தொடர்ந்து புலன் விசாரணையிலீடுபட்ட சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட்திரு செல்துயாமேற்படி பெண்ணை நெல்லியடியில் வைத்துக் கைதுசெய்தார். சுன்னாகம் பொலிசில் இவர் றிமாண்டில் வைக்கப்பட்டார். களவாடப்பட்ட நகைகள் அடைவு வைக்கப்பவர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டு [illegible]

காங்கேசன்துறை

### எல்லை விஸ்தரிப்புக்கு பட்டினசபை எதிர்ப்பு

அளவெட்டி, திங்கள்

பட்டினசபை எல்லை விஸ்தரிப்பதை காங்கேசன்துறை பட்டினசபை எதிர்க்கும் தீர்மானம் ஒன்று பட்டினசபையின் விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

காங்கேசன்துறைப் பட்டின சபை சபா மண்டபத்தில் பட்டின சபை உபதலைவர் திரு. சிவனடியார் தலைமையில்நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் 4 அங்கத்தவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தைக் கொண்டுவந்தனர்.

'காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லையை, விஸ்தரிப்பதற்கு தெல்லிப்பழைக் கிராம சபையின் ஒருபகுதியையும், மயிலிட்டிக் கிராம சபையின் ஒருபகுதியையும் சேர்த்து அரசாங்கம் விஸ்தரிக்கப் போவதாக அறிகிறோம். பட்டின சபை எல்லைக்குள்ளே சில வட்டாரங்கள் என்றும் முற்போக்கு உள்ள முறையில்வரவில்லை. இப்போ இருக்கும் பட்டின சபை எல்லைக்குள்ளேயே போதிய பிரதேசமும், கூடுதலான வாக்காளர்களும் இருக்கின்றார்கள். இப்போ இருக்கும் எல்லைகளுக்குள்ளேயே வட்டாரங்களைக் கூட்டலாம். ஆனபடியால் இப்போ இருக்கும் பட்டின சபை எல்லையை விஸ்தரிக்க வேண்டாம்' என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் விசேட கூட்டத்தில் நிறைவேறியது.

### செனட்டில் அனுதாபம்

கொழும்பு, திங்கள்

செனட்சபையில் டாக்டர் கிங்கின் மறைவுக்கு இன்று அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. இரு நிமிடநேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### நோயாளர் அதிகரிப்பு

புலோலி, திங்கள்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் தினசரி மருந்து பெறவரும் வெளிநோயாளர்களின் தொகை இப்பொழுது அதிகரித்துள்ளது. வரட்சியினால் ஏற்பட்ட வியாதிகளினால் பீடிக்கப்பட்ட நோயாளரே அதிகமாகக் காணப்படுகின்றனர்.

நோயாளர்கள் அதிகமாக வருவதால் நேரகாலத்துக்கு மருந்தை விநியோகிக்கமுடியாது இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் திண்டாடுகிறார்கள்.

### மீண்டும் 'போலியோ'

கொழும்பு, திங்கள்

இலங்கையில் சென்ற இரண்டு மூன்று மாதங்களில் 32 பேர் போலியோ என்னும் இளம்பிள்ளைவாத நோயில் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 12 பேர் இந்நோயினால்பீடிக்கப்பட்டனர்.

இவர்களில் 90 சதவீதமானோர் ஐந்து வயதுக்குட்பட்டவர்களாவர். போலியோ தடுப்பு மருந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

### பேர்ஸை திருடினாராம்

குரும்பசிட்டி, திங்கள்

வைத்திய அதிகாரியின் வீட்டில் பணியாளராகக் கடமையாற்றிய பதினைந்து வயது இளைஞர்ஒருவர் தமது எஜமானின் பணப் பேர்சினைத் திருடிக் கொண்டு வீட்டைவிட்டு ஓடிவிட்டாராம், இப் பேர்சில் 53ரூபா 82சதம் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மயிலிட்டி மார்பு நோய்ஆஸ்பத்திரி டாக்டர் எஸ். சிவகுமாரன் என்பவரது வீட்டிலேதான் இச் சம்பவம்நடைபெற்றுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரை யடுத்து மணி என்றஇளைஞரைபொலிசார் கைது செய்துள்ளனர். மல்லாகம் நீதிபதி முன்னிலையில் இவ் இளைஞர் ஆஜர் செய்யப்படவிருக்கிறார்.

புத்தளத்தில்

### சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

புத்தளம், செவ்.

புத்தளப் பகுதியில் சைக்கிள்கள் அதிகமாகத் திருட்டுப்போகின்றனவாம். புத்தளம் ஜும்மா பள்ளிவாசலுக்குத் தொழுகைக்குச் சென்ற ஒருவரது சைக்கிளையும், புத்தளம் வாசிகசாலை முன்பாக வைக்கப்பட்டிருந்த ஒரு சைக்கிளையும் கட்டுப்பாட்டு மலிவு விற்பனை இலாகாவில் வேலைபார்க்கும் ஒருவருடைய சைக்கிளையும், யாரோ திருடிவிட்டனராம்.

இன்னும் மூன்று சைக்கிள்கள் இங்கு ஒரு படமாளிகையில் வைக்கப்பட்டிருந்தபோது காணமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி பொலிசார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

### ஆசிரியர் மாணவர் கஷ்டம்

புத்தளம், செவ்.

இங்குஏழு கனிஷ்ட சிரேஷ்டமகா வித்தியாலயங்கள் உள்ளன. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கின்றனர். எட்டு மைல், பத்து மைலுகளுக்கும் அப்பால் இருந்தும் மாணவர் ஆசிரியர்கள் வருகின்றனர். பஸ் வந்து நின்றதும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஓடியோடி பாடசாலை செல்லும் காட்சி மிகவும் பரிதாபமாக இருக்கும். மன்னார்பாதை வழியாக கரைத்தீவு இலவங்குளம் செல்லும் பஸ் காலை 7-20க்குச் செல்லும் என்று நேரசூசியில் போடப்பட்டுள்ளது. ஆனால் நேரசூசிப்படி போவது வெகுஅபூர்வம்இதனால் பல ஆசிரியரும் மாணவரும் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org